# இம்புல்பே பிரதேச சபை
# இரத்தினபுரி மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 பெப்ரவரி 24 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 பெப்ரவரி 21 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 ஆகஸ்ட் 21 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள எனது அறிக்கையில் காணப்படும் கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள இம்புல்பே பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) சபையின் கப் வாகனம் 2010 மே 23 ஆந் திகதி விபத்துக்குள்ளாகியதில் அதனைப் பழுதுபார்ப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 155,700 தொகை 2010 ஆம் ஆண்டில் சபையின் செலவினமாக கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன் 2011 மார்ச் 17 ஆந் திகதி கிடைத்த காப்புறுதி இழப்பீட்டுத் தொகையான ரூபா 91,750 சபையின் வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டமையினால் ஆண்டின் வருமானம் அத்தொகையினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய வருடத்திற்காக மீளாய்வாண்டின் போது கிடைத்த காணி மாற்றங்களின் முத்திரைக் கட்டணமான ரூபா 1,015,521 தொகை திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்படவேண்டிய போதிலும் ஆண்டின் வருமானமாகக் கணக்கு வைக்கப்பட்டமையினால் ஆண்டின் வருமானம் அத்தொகையினால்

அதிகரித்தும், ஆண்டின் இறுதியில் கடன்பட்டோர் மீதி அத்தொகையினால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தன.

(இ) பெலிஹுல்ஓய சிறிய நீர் மின்உற்பத்தி நிலையத்திற்காக தனியார் கம்பனியிலிருந்து மீளாய்வாண்டில் அறவிடவேண்டிய வாடகைத் தொகையினைக் கணக்குகளுக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் முன்னைய ஆண்டிற்காக மீளாய்வாண்டின் போது கிடைத்த ரூபா 481,369 தொகை மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டமையினால் ஆண்டின் வருமானம் அத்தொகையினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வைப்புக் கணக்கிலுள்ள ரூபா 6,054,835 தொகை சபை அங்கீகாரமின்றி நாட்குறிப்பு இல. 08 இன் மூலம் திரண்டநிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 7,512,941 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,870,899 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,832,791 ஆக இருந்தது

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 90 | 79 | 61 |
| (ii) | வாடகை | 36 | 31 | 5 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 350 | 418 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 2,600 | 2,974 | 703 |

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 4,002,588 ஆக இருந்ததுடன் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 நிலுவை நீர்மானிக் கட்டணம்

புதிய நீர் இணைப்பை வழங்கும் போது மானிக் கட்டணமாக அறவிடப்படுகின்ற ரூபா 7,500 தொகை நீர் இணைப்பை வழங்குவதற்கு முன் அறவிட வேண்டியிருந்த போதிலும் 2009 ஆம் ஆண்டு தொடக்கம் நீர் இணைப்பு வழங்கப்பட்ட இடங்களிலிருந்து ரூபா 613,200 தொகையான நிலுவை மானிக்கட்டணம் அறவிட வேண்டியிருந்தது.

### 2.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பிரதேச சபையின் உறுப்பினர் ஒரவரினால் சபையின் சில ஊழியர்களை எடுத்துச் சென்று தனியார் காணியில் ஒரு பகுதியில் பலாத்காரமாக உட்சென்று வேலி அடித்த காரணத்தினால் தொடுக்கப்பட்டிருந்த 3267 ஆம் இலக்க வழக்கு 2011 ஏப்ரல் 06 ஆந்

திகதி பலாங்கொடை மாவட்ட நீதிமன்றத்தில் சமரசத்துக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இந்த வழங்கிற்காக சட்டத்தரணிக் கட்டணமாக ரூபா 20,840 தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

## 2.4 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 19(1)(i) இன் பிரகாரம் பதவிகளைத் தோற்றுவித்தல் மற்றும் படிகள் கொடுப்பனவுகளின் போது உள்ளூராட்சி ஆணையாளரின் முன் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் நீர் உத்தேசத் திட்டத்தைப் பராமரிக்கின்ற மூன்றுபேர்களுக்கு அவ்வாறான அங்கீகாரம் பெறப்படாமல் 2011 மே தொடக்கம் திசெம்பர் வரை ரூபா 192,000 படியாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 2.5 ஒப்பந்த நிருவாகம்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழுள்ள கமநெகும செயற்திட்டத்தில் தெரிவின் அடிப்படையில் 2011 திசெம்பர் 12 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தெல வீதி மற்றும் முத்தெட்டுவேகம ஹொலம்பிலிதென்ன வீதி

(i) அங்கீகரிக்கப்பட்ட மண் வழங்கியமையை உறுதிப்படுத்துவதற்கான மண் அளவிடைகள் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) 6X9 அளவான செப்பனிடும் கற்கள் போடப்பட்ட இடத்தை தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் இனங்காணமுடியாதிருந்தது.

(iii) மேற்கூறப்பட்ட செலவின விடயத்திற்காக ரூபா 494,178 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) போகொட்டுவ வீதியில் கற்பாறைக்கு அருகில் பக்கச் சுவர் நிர்மாணித்தல்

நிர்மாணங்களுக்காக 2011 நவம்பர் 28 ஆந் திகதி ரூபா 588,000 தொகைக்கு விவசாரயச் சங்கமொன்றுடன் உடன்படிக்கையில் சைக்காத்திடப்பட்டிருந்தது.

(i) மதிப்பீட்டு விடய இல.3 இன் பிரகாரம் 1:3:6(1½'') கொங்ரீட் கலவையில் 4'' கல் ஈடுபடுத்தப்பட்டு பலமான கொங்கிரீட் இடுவதற்காக ரூபா 59,400 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 6''X9'' கொங்ரீட் கற்களினால் சுவர்கட்டப்பட்டிருந்தது.

(ii) செலவிட விடயத்தின் திருத்தத்திற்காக பெறப்பட்ட அங்கீகாரம் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மாமல்கஹ பகுதியில் கோயில் அருகிலிருந்து வெலஹின்ன வரையான வீதி

---

வேலைகளுக்காக ரூபா 200,000 தொகையான நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் விவசாயச் சங்கமொன்றுடன் 2011 நவம்பர் 04 ஆந் திகதி உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடப்பட்டடிருந்தது. மதிப்பீட்டில் காணப்படாத மொரவகதுர வீதி வெட்டுவதற்காக 70 மண் கீயூப்களுக்காக ரூபா 25,900 செலவிடப்பட்டிருந்ததுடன் மதிப்பீடு செய்யப்பட்ட வீதியில் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தம்பிட்டிய வீதிக்கு கொங்ரீட் இடுதல்

---

ரூபா 600,000 நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் கிராம அபிவிருத்திச் சங்கமொன்றுடன் 2010 நவம்பர் 12 ஆந் திகதி ரூபா 600,000 தொகையில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது.

(i) மதிப்பீட்டு விடய இல. 13 இன் பிரகாரம் 1:2:4 (3/4'') கலவையில் கொங்ரீட் இடுதல் 200 மீற்றருக்காக அளவிடை பெறப்பட்டு 49.2 மீற்றருக்காக ரூபா 464,660 தொகை செலுத்தப்பட்டிருந்தன. நிர்மாணிக்கப்பட்ட வீதியின் நீளம் 182.5 மீற்றராக இருந்தமையால் 4.3 மீற்றருக்காக ரூபா 40,611 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தன.

(ii) வேலை விடய இல. 1 இல் வீதி இரு பக்கமும் காண் வெட்டுவதற்காக ரூபா 12,716 தொகை செலுத்தப்பட்ட போதிலும் அந்த வேலை விடயங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 2.6 செயற்பாட்டு / முகாமைத்துவ செயற்திறமையீனங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 மே 26 ஆந் திகதிய பொதுக்கூட்டத் தீர்மானத்தின் பிரகாரம் றத்மலவின்ன நீர் உத்தேசத் திட்டத்திற்குரிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சபைக்குக் கையளிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் பாதீட்டின் மூலம் 18 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 936,000 தொகையில் எதுவும் செலவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) சப்ரகமு மாகாண சபை ஏற்பாட்டின் கீழ் அமுபிட்டிய மாமல்கஹ வீதியில் 0.00 கி.மீ தொடக்கம் 2.10 கி.மீ வரை அபிவிருத்தி செய்தல் வேலையின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 2,256,487 ஆக இருந்ததுடன் நேர்க்கூலி அடிப்படையில் நிறைவேற்றுவதற்கு 2007 ஒக்தோபர் 30 ஆந் திகதி பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இவ்வேலைகளை நிர்மாணித்தல் உரிய திகதியில் பூர்த்தி செய்வற்கு சபை முடியாதிருந்ததுடன் வேலைகளுக்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 2,896,873 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் மாகாண சபையிலிருந்து கிடைத்த தொகை ரூபா 2,201,451 ஆக இருந்தது.

(ஈ) நாகெட்டிய உப வீதி ஜேசிபீ இயந்திரத்தை ஈடுபடுத்தி புனருத்தாபனம் செய்யும் வேலை சப்ரகமுவ மாகாண சபை நிதிஏற்பாட்டின் கீழ் நிர்மாணச் செயற்பாடுகள் மத்தேகம சனசமூக அபிவிருத்திச் சங்கத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் இந்த நிர்மாணங்கள் 2010 யூன் 04 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டு ரூபா 57,500 தொகை இரண்டு சந்தர்ப்பங்களின் போது செலுத்தப்பட்டிருந்தன. இப் பணத்தை மீளளிப்பதற்காக மாகாண சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட உறுதிச்சீட்டில் பல்வேறு குறைபாடுகளின் காரணமாக மீளளிக்க முடியாமையினால் பிரதேச சபை நிதியத்திற்கு நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(உ) செயல்நிமித்த உபகட்டுநிதி அது வழங்கப்பட்ட செயற்பாடு முடிவடைந்ததும் உடனடியாகவே தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஒக்தோபர் 17 வரையான காலத்தில்

செலுத்தப்பட்ட ரூபா 4,819,247 கூட்டுத்தொகையான முற்பணத்தை தீர்ப்பதற்கு 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) உள்ளகக் கட்டுப்பாடு
(ஈ) வருமான நிருவாகம்
(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஊ) ஒப்பந்த நிருவாகம்